# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி
## பழநி வட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம்
## வேலை வாய்ப்பு அறிவிப்பு

**ந.க.எண்.968/2022/அ4 நாள்:11.10.2022**

திண்டுக்கல் மாவட்டம், பழநி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் காலியாக உள்ள உள்துறை பணியிடங்களில் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்படவுள்ள கீழ்காணும் பணியிடங்களுக்கு தகுதியுடைய 18 முதல் 45 வயது நிரம்பிய இந்து மதத்தைச் சேர்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | காலி பணியிடம் | சம்பள விகிதம் | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1 | கட்டியம் (மலைக்கோயில்) (உபகோயில்) | 1<br>1 | Level -12 Matrix-1 ரூ.11600-36800 (இதர படிகள்) | 1. தமிழ் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2. ஆகம பள்ளியில் ஓராண்டு காலம் பாடநெறி அல்லது மத நிறுவனங்கள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களால் நடத்தப்படும் வேத பாடசாலைகளில் படித்ததற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 2 | உதவி சுயம்பாகம் (உபகோயில் - 2) | 2 | Level -10 Matrix-1 ரூ.10000-31500 (இதர படிகள்) | 1. தமிழ் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2. திருக்கோயில் பழக்க வழக்கங்களுக்குட்பட்டு நெய்வேத்ய பிரசாதங்கள் தயாரிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 3 | திருமஞ்சனம் (உபகோயில்) | 1 | Level -12 Matrix-1 ரூ.11600-36800 (இதர படிகள்) | 1. தமிழ் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2. ஆகம பள்ளியில் ஓராண்டு காலம் பாடநெறி அல்லது மத நிறுவனங்கள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களால் நடத்தப்படும் வேத பாடசாலைகளில் படித்ததற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 4 | மாலைகட்டி (மலைக்கோயில்) | 1 | Level -10 Matrix-1 ரூ.10000-31500 (இதர படிகள்) | 1. தமிழ் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2. திருக்கோயில் நித்தியப்படி பூஜை மற்றும் உற்சவங்களில் சாத்துப்படி செய்வதற்கான அலங்கார மலர் மாலைகள் தொடுப்பதில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 5 | வயலின் (உபகோயில்) | 1 | Level -16 Matrix-1 ரூ.15700-50000 (இதர படிகள்) | 1. தமிழ் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மற்றும்<br>2. மத நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களால் நடத்தப்படும் இசை பயிற்சி பள்ளியிலிருந்து அதன் தொடர்புடைய துறையில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | புல்லாங்குழல் (உபகோயில்) | 1 | Level -16 Matrix-1 ரூ.15700-50000 (இதர படிகள்) | 1. தமிழ் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். மற்றும் 2. மத நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களால் நடத்தப்படும் இசை பயிற்சி பள்ளியிலிருந்து அதன் தொடர்புடைய துறையில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 7 | சலவையாளர் (மலைக்கோயில் – 1 அனைத்து உபகோயில் –1) | 2 | Level -12 Matrix-1 ரூ.11600-36800 (இதர படிகள்) | தமிழ் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். |

விண்ணப்ப படிவம், தகுதிகள் மற்றும் இதர விவரங்கள் www.hrce.tn.gov.in மற்றும் www.palanimurugan.hrce.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய தகுதிச்சான்றுகளுடன் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 14-10-2022 தேதி முதல் 15-11-2022 தேதி முடிய மாலை 5.00 மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி தேதிக்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

இணை ஆணையர்/செயல் அலுவலர்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழநி – 624 601
திண்டுக்கல் மாவட்டம்

---

நா.நடராஜன்,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்
அ.இரா.பிரகாஷ்,
துணை ஆணையர்
சு.லட்சுமி,
உதவி ஆணையர்/நேர்முக உதவியாளர்

க.சந்திரமோகன்,
அறங்காவலர் குழுத்தலைவர்
கே.எம்.சுப்பிரமணியன், அறங்காவலர்
ச.மணிமாறன், அறங்காவலர்
ரா.ராஜசேகரன், அறங்காவலர்
கே.சத்யா, அறங்காவலர்

## நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் 01.07.2022ம் தேதி அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்து மதத்தைச் சார்ந்தவராகவும்.இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்

3. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

4. இவ்விளம்பரம் செய்யப்பட்ட தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. விண்ணப்பத்துடன் கல்வித் தகுதிக்குரிய சான்றிதழ்கள் மற்றும் கூடுதல் கல்வித்தகுதிக்கான சான்றிதழ்கள் மற்றும் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற பிற ஆவணங்களுக்கு சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

6. விண்ணப்பதாரர் வயதிற்கான சான்று ஆவணம் அல்லது கல்வி நிலையத்தால் வழங்கப்பபட்ட மாற்று சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.(T.C)

7. விண்ணப்ப படிவத்தில் விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்றுகள் இணைக்கப்படாமலும், பெறப்படும் விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் இத்திருக்கோயிலின் உபகோயில்களுக்கும், பணியிட மாறுதல் செய்யப்படுவார்.

9. விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றிதழ் (கண்டிப்பாக விண்ணப்பத்துடன் அசல் சான்றிதழ்) இணைக்கப்பட வேண்டும்.

10. விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது பதவியின் பெயரை குறிப்பிட்டு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.

11. நேர்முக தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும், வழங்கப்படமாட்டாது.

12. நேர்முக தேர்விற்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரை எவ்வித காரணங்களும் கூறாமல் நிராகரிக்கவும், பணி நியமனம் வழங்காமல் இருக்கவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

13. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கல்வி தகுதி மற்றும் பிற தகுதிக்குரிய ஆவணங்களின் அசல் சான்றிதழ்கள் நேர்முக தேர்வின் போது கண்டிப்பாக கொண்டு வரப்பட வேண்டும்.

14. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்படும் விவரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதியளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்தும், சட்ட ரீதியான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.

15. நிர்ணயிக்கப்பட்ட காலகெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். மேலும், தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு பின்னர் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவர்.

16. விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் உண்மைத் தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

17. விண்ணப்பத்தின் விலை ரூ.50/- திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

18. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பத்திற்கு கட்டணம் செலுத்திய ரசீது நகல் இணைக்கப்பட வேண்டும்.

19. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 05.09.2022.

20. தொற்று நோய், உடல் மற்றும் மனநிலை குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்

21. திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள், அரசு பணி மற்றும் பொது நிறுவனங்கள், இதர திருக்கோயில்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

22. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் காரணம் தெரிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

23. தமிழில் சிறிய அளவில் எழுத்து தேர்வு நடத்தப்படும்.

24. வேலை வாய்ப்பு அறிவிப்பினை www.palanimurugan.hrce.tn.gov.in மற்றும் www.hrce.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

25. தெய்வீகத்தாலும், இராஜ்ஜியத்தாலும், ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பு அல்ல.

26. திருக்கோயில் அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தினை உரிய தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

(ஓம்) நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

12/10/22

## அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி

## வேலைவாய்ப்பு விண்ணப்பம்

விண்ணப்பதாரரின்

புகைப்படம் சான்றொப்பத்துடன்

| | | |
|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | : |
| 2. | பெயர் | : |
| 3. | தந்தையின் பெயர் | : |
| 4. | நிரந்தர முகவரி | : |
| 5. | மதம் (சாதிச்சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | : |
| 6. | பிறந்த தேதி மற்றும் வயது (பள்ளிச்சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | : |
| 7. | கல்வித் தகுதி (நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்) | : |
| 8. | உள்துறை பணியிடத்திற்கான கல்வித் தகுதி (நிர்ணயிக்கப்பட்ட உள்துறை கல்வித் தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்) | : |
| 9. | திருக்கோயில்களில் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் நகல் இணைக்கப்படவேண்டும் | : |
| 10. | நன்னடத்தை சான்று ( அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து) | : |
| 11. | பொதுவானவை | : |

மேலே கூறப்பட்ட வரிசை எண் 1 முதல் 11 வரையிலான விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் நான் இந்து சமயத்தை சார்ந்தவன் என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

நாள்:

இடம்:

விண்ணப்பதாரரின் கையொப்பம்